[4th September 1958

கேட்டால், ஒவ்வொருவரும் ஒவ்வொருவித அபிப்பிராயத்தைச் சொல்லக் கூடும். அதனால் குழப்பம் தான் ஏற்படும். எவ்வாறு கல்விப் பிரச்னை, ஸ்தல-ஸ்தாபனங்கள் பிரச்னை, மொழிப் பிரச்னை இவைகளைப் பற்றி திட்ட வட்டமான, உருப்படியான யோசனைகளைச் சொல்லி அதன் பிறகு ஒரு மகாநாட்டைக் கூட்டி முடிவுகள் எடுத்தோமோ அப்படி இதிலும் செய்தால் ஒரு முடிவுக்கு வரமுடியுமே தவிர, ஒரு கூட்டத்தைக் கூட்டி கட்சித் தலைவர்களின் ஆலோசனைகளைச் சொல்லச் சொன்னால், மாறுபட்ட கருத்துக்கள் தான் வெளியாகுமே தவிர, ஜாதியை ஒழிப்பதற்குத் திட்டவட்டமான ஒரு வழியை வகுக்க முடியாது என்பது தான் என்னுடைய கருத்து.

* 48 *Q.*—Sri N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have any information about the proposal of the Centre to avoid caste names while taking enumeration lists in connection with the census to be taken in 1961?

The Hon. Sri C. SUBRAMANIAM: I have no information, Sir.

Sri N. K. PALANISAMI: வோட்டர் ஜாபிதாக்களில் பதிவு செய்கின்ற பெயர்களுக்கு நேராக ஜாதிப் பெயரைப் போடாமல் இருப்பதற்கு நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்குச் சிபார்சு செய்வார்களா? ஜாதி ஒழிப்பிற்கு இது முதல் நடவடிக்கையாக இருக்காதா?

The Hon. Sri C. SUBRAMANIAM: பெயருக்குப் பின்னால் ஜாதிப் பெயரைப் போடாமலிருந்தால் ஜாதி ஒழிப்பு ஏற்பட்டுவிடும் என்று சொன்னால், அது மிகவும் சுலபம். மனதிலே இருக்கக் கூடிய எண்ணங்களை ஒழிப்பதுதான் முக்கியம். எந்த விதத்தில் இந்த ஜாதி வேறுபாடுகளை ஒழிப்பது என்பதுதான் பிரச்னை. ஆனால் ஜன சங்கியைப் பொறுத்த புள்ளி விவரங்களுக்குச் சில விவரங்கள் அவசியமாக இருக்கின்றன. எவ்வளவு தூரம் இந்தப் பெயர்களைத் தவிர்க்க முடியும் என்பதைப் பற்றி ஆலோசனை செய்துதான் முடிவு செய்யவேண்டும்.

Sri K. SATTANATHA KARAYALAR: மத்திய சர்க்கார் வேண்டுதலின் பேரில் பின் தங்கிய வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகளை ரத்து செய்துவிட்டு, திறமையை அடிப்படையாகக்கொண்டு சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சர்க்கார் சிபார்சு செய்திருக்கிறதா?

The Hon Sri C. SUBRAMANIAM: இந்தப் பிரச்னையும் இப்பொழுது பரிசீலனையில் இருக்கிறது. அதுவும் கூட ஆலோசனைக்கு வரும்.

Sri S. NAGARAJA MONIGAR: ஜாதிகளை ஒழிக்கும் விஷயத்தில் சர்க்காரே தலையிட்டு நடவடிக்கை எடுக்குமா அல்லது அரசியல் ரீதியில் சமூகத் தலைவர்களைக் கலந்து அபிப்பிராயம் தெரிந்து கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: இதிலே உடனடியாக இன்ன முறையில்தான் செய்யப் போகிறோம் என்று திட்டவட்டமாகச் சொல்லும்படியான நிலையில் நான் இப்பொழுது இல்லை. படிப்படியாகத் தான் இம்மாதிரி விஷயங்களில் முன்னேற முடியும்.

Irrigation

* 49 *Q.*—Sri M. JAGANNATHAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any lift irrigation schemes have been sanctioned for the South Arcot district; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) A statement [a] is placed on the table of the House

SRI M. JAGANNATHAN : Is the Hon. Minister aware that Sangaraparani is the only river that courses through Tindivanam taluk, South Arcot district and the Tindivanam taluk is wholly high and dry suffering from acute shortage of water? In view of this scarcity of water facilities for cultivators in Tindivanam taluk, will the Government come forward to start lift irrigation schemes in that river in Tindivanam taluk?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not know, Sir, whether it is feasible to have river pumping schemes in that river Sangaraparani. Anyhow I shall have that examined.

* 50 *Q*,—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இந்தியா கவர்ன்மெண்டால் 1957-ம் வருஷம் ஜூலை மாதத்திலே நியமிக்கப்பட்டு சென்னை ராஜ்யத்துக்கு விஜயம் செய்த **(Expert Committee on Minor Irrigation)** கமிட்டியானது நம் ராஜ்ய நீர்ப்பாசனப் பகுதி பிரதம இஞ்சினியர் **(Chief Engineer, Irrigation)**, அவர்களோடு கலந்தாலோசித்த விஷயங்கள் யாவை ?

(ஆ) 1957-ம் வருஷம் நவம்பர் மாதம் 14, 15-ஆம் தேதிகளிலே மத்திய கவர்ண்மெண்ட் உணவு டெபுடி மந்திரி அவர்களின் தலைமையின் கீழ் பெங்களூரில் நடைபெற்ற கூட்டத்தில் சென்னை ராஜ்யத்திலே நடை பெறக் கூடிய சிறு நீர்ப்பாசன திட்டங்கள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்ட விஷயங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) There is no information about the Committee. The Chief Engineer (Irrigation) has had no discussion with such a Committee.

(*b*) The possibilities of accelerating the tempo of execution of Minor Irrigation scheme and the question of taking up additional schemes were discussed. Opportunity was taken to press the Government of India officials to sanction the grant of financial assistance for the following Minor Irrigation schemes of 1957–58 and following the conference, assistance was actually granted by the Government of India as noted below :—

(1) Special Minor Irrigation Programme works ...	Grant Rs. 11·25 lakhs.
(2) Small drainage schemes ...	Grant Rs. 1,375.
(3) Lift Irrigation Hire Purchase scheme for distribution of oil engines and electric motors	Loan Rs. 7·5 lakhs.
(4) Lift Irrigation (Hiring) schemes	Grant Rs. 37,500.

a Printed as Appendix II on page 215 infra.